# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,035 — 1964 මැයි 15 වැනි සිකුරාදා — 1964.5.15

14,035 ம் இலக்கம்—1964 ம் ஆண்டு மே மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 131 | ஆயவிற்பனையும் குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 133 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 136 | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும், பிறவும் .. .. | 138 | நாணுவிதம் .. .. .. | — |


### பதவிகள்—வெற்றிடம்

**"இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிகளுக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்"**

1. **படிகள்.**—வேறுவிதமாய்ச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. **சேவைக்குரிய நிபந்தனைகள்.**—அரசாங்க சேவைக்கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைந்நூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. **நியமன விதிகள்.**—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள்வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினுல் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினுலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சதவீதத்தை அரசாங்கம் ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாது அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுவோர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. **புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.**—(i) "சந்தர்ப்பத்துக்குத் தக்கதாக இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்பட்டு, இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கு நியமிக்கப்படும்" புதிய உத்தியோகத்தர்களுக்குரிய தகுதிகாண்காலம்/பரீட்சாகாலம் ஏதும் பதவிகளுக்குரிய அக்காலம் 3 ஆண்டுகளுக்கு மேலாகவிருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டால் ஒழிய, 3 ஆண்டுகளாகும்.

(ii) "புதிய உத்தியோகத்தர்" ஏற்கெனவே இயற்றப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு அல்லது அரசாங்கத்தின் மொழிக்கொள்கையை அமுல் நடத்துவதற்கு, அதினும் விசேடமாக, 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இல. அரசாங்க மொழிச்சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறையிற் கொண்டுவருதற்கு இனிச் செய்யப்படக்கூடிய பிரமாணங்களுக்கு இயைய நடத்தல் வேண்டும்.

(iii) (அ) இவ்வுத்தியோகத்தர்கள் தங்களுடைய தகுதிகாண் நிலைக் காலத்தில்/பரீட்சாகாலத்தில் சிங்களமொழியறிவைப் பெறவேண்டும்.

(ஆ) தகுதிகாண்கால/பரீட்சாகால முடிவில் அவர்களின் நியமன ஊர்ஜிதம், வேறு விடயங்களுடன் சிங்கள மொழியில் ஓர் தேர்வுப்பரீட்சையில் சித்தியெய்துவதைப் பொறுத்திருக்கும்.

### முக்கிய விளம்பரம்

*1964 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 25 ந் திகதி திங்கட்கிழமை அரசாங்க விடுமுறையாக இருப்பதால் 1964 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 29 ந் திகதி வெளிவரவிருக்கும் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட வேண்டிய சகல விளம்பரங்களும் அறிவித்தல்களும் 1964 ம் ஆண்டு வைகாசி (மே) மாதம் 23 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் அரசாங்க அச்சகத்திற்கு வந்துசேர வேண்டுமென இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.*

**பேர்னுட் த சில்வா,**
*அரசாங்க அச்சகத் தலைவர்.*

*அரசாங்க அச்சகம்,*
*கொழும்பு,*
*1964 ம் ஹு வைகாசி (மே) மீ 5 ந் உ.*

தகுதிகாண் நிலைக்காலத்தில்/பரீட்சைக்காலத்தில் சிங்கள மொழியறிவுப் பரீட்சையில் விதிக்கப்பட்ட தராத்தை எய்தத் தவறுபவர்கள் பதவியிலிருந்து நீக்கப்படுவர்; ஆனால் குறித்தவோர் உத்தியோகத்தர் அரசாங்க மொழியில் அறிவைப் பெறுதற்கு மனப்பூர்வமாக முயற்சித்திருக்கிறார் என்று நியமனம் செய்யும் அதிகாரி கருதுவாராயின் குறித்த பதவி நீக்கம் பின்போடப்படலாம். உரிய திகதிக்குப்பின் நியாயமான அளவு காலத்துக்குள் குறித்த உத்தியோகத்தர் குறித்த பரீட்சையிற் சித்தி எய்துவாராயின், சிரேட்டத்துவம் இழப்பதும் இல்லாமற் போகலாம்.

(iv) சிங்கள மொழிமூலம் அரசாங்க உத்தியோகத்திற் சேர விரும்பும் உத்தியோகத்தர்கள் சிங்கள மொழியறிவுப் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும் என்ற விதியிலிருந்து விலக்களிக்கப்படுவர்.

குறிப்பு.—" புது உத்தியோகத்தர் " என்பது இங்கே, 195 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24 ஆம் திகதிக்குப் பின் அரசாங்க சேவைப் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டவர்களாய் 1957 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் திகதியைக் கொண்ட 379 ஆம் இல. திறைசேரிச் சுற்றுநிருபத்தின் உபபந்திகள் 2 (ii) (B), 2 (ii) C என்பனவற்றுக்கிணங்கப் பழைய உத்தியோகத்தர்களாயில்லாதவர்களைக் கருதும்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தரைக்கும்படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, வான் பாதுகாப்புப்படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேரக் கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அசசேவைக் காலத்தைத் தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு, அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **வேறு விதிகள்.**—(i) அரசாங்க சேவையில் இப்போது இருப்பவராயும், வேண்டிய தகைமைகளைக் கொண்டவர்களாயுமுள்ள உத்தியோகத்தர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தங்கள் தங்கள் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பவேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்கள் அனுப்பும் விண்ணப்பங்களை அந்த அந்தப் பகுதித் தலைவர்கள் அனுப்பும்போது, குறித்த விண்ணப்பதாரர்கள் (தெரிவுசெய்யப்பட்டால்) கருமமுறைக் கைநூலின் 109 ஆம் பரிபாலன ஒழுங்குவிதிக் கிணங்க அவ்விண்ணப்பதாரரை விடமுடியும் என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச்செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்குக் குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்துச் சிபாரிசு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில், தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேடமுயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்ப, அது தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாகிவிடும். தெரிவுக்குப்பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால், தெரிவுசெய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

---

## இலங்கை வங்கி

வங்கிச் சேவையில் கனிஷ்ட எழுதுவினைஞர்களுக்கும், உதவிக் காசாளர்களுக்குமான பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் உதவிப் பொது முகாமையாளர், (ஊழியர்கள்) இலங்கை வங்கி, மத்திய அலுவலகம், இலங்கை வங்கிக் கட்டிடம், கொழும்பு 1 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் மேற்படி விலாசத்துக்கு, 1964 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

அ. சம்பளமும் படியும்

1. தகுதிகாண் நிலையில் ரூபா 106/–
2. நிரந்தர நிலையில் ரூபா 106/- இருந்து ரூபா 290/-
   18 × 6, 4 × 7, 1 × 8, 4 × 10
3. வாழ்க்கைச் செலவுப்படி இலங்கை வங்கி வீதப்படி வழங்கப்படும்.

ஆ. தராதரங்கள்

1. வயது.—விண்ணப்பதாரிகள் 6.6.1964 இல் 20 வயதுக்கு மேற்பட்டவர் ஆகவும், 24 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. சாதியம்.—விண்ணப்பதாரிகள் இலங்கைப் பிரசையாயிருத்தல் வேண்டும். இதையொட்டி " இலங்கையர் " என்பவர் வம்சாவழியாகவோ, பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

3. கல்வித் தராதரங்கள்.

(1) சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி. (இதில் கட்டாயமாக (அ) சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், (ஆ) எண் கணிதம் அல்லது வாத்தக கணிதம் அல்லது கணிதத்திலும், (இ) ஆங்கிலத்திலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்).

ஒரே முறையில் ஐந்து பாடங்களில் திறமையாகச் சித்தி பெற்றவர்களுக்குச் சலுகையளிக்கப்படும்.

அன்றேல்

(2) பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சை (சாதாரணம்) யில் குறைந்தது ஆறு பாடங்களில் சித்தி. (இதில் கட்டாயமாக (அ) சிங்களம் அல்லது தமிழ் மொழியிலும், (ஆ) எண்கணிதம் அல்லது வர்த்தக கணிதம் அல்லது கணிதத்திலும் (இ) ஆங்கிலத்திலும் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)

ஒரே முறையில் ஐந்து பாடங்களில் திறமையான சித்தி பெற்றவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.

இ. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை (மூலத்தையல்ல) விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச்சாட்சிப் பத்திரம்.

(ஆ) கல்வித் தகமைத் தராதரப்பத்திரம்.

(இ) விண்ணப்பதாரியின் மூன்று கிட்டியகாலத் தகமை, சீலம், தகுதி பற்றிய பத்திரங்கள்.

ஈ. சேவை நியதிகள்

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் :—

(அ) நியமனத்திற்கு முன்னதாக வைத்திய பரிசோதனையில் தகுதியுடையவர்களாகக் காணப்படல் வேண்டும்.

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாமலும் மூன்று வருடத்திற்கு மேற்படாமலும் உள்ள தகுதி காண் சேவையில் சேவைபுரிதல் வேண்டும். பிரத்தியேக விடயங்களில் வங்கிமுகாமை தகுதி காண் காலத்தினை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க முடியும்.

(இ) வங்கியின் முதிர்வு உபகாரச் சம்பளத் திட்டமொன்றில் சேருமாறு வேண்டப்படுவர்.

(ஈ) தகுதிகாண் நிலைக் காலத்தில் உத்தியோக மொழித் தேர்வுப் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும்.

உ. பிணை (உதவிக் காசாளருக்கு மாத்திரம்)

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் ரூபா 2,500/- பிணையில் ரூபா 1,500/- பணமாகவும், மிகுதி ரூபா 1,000/– விசுவாச உறுதிச்சீட்டாகவும் இருத்தல் வேண்டும்.

தேர்வுநாடிகள் நேர்முகத் தேர்வுக்கு கொழும்பிற்கு சமுகம் தர வேண்டும். பிரயாணச் செலவோ வேறு எவ்வித செலவுகளோ வழங்கப்படமாட்டா. தேர்வுநாடிகள் எல்லோரும் தமது விண்ணப்பங்களை பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதனை அறிய விரும்பின் விலாசமும் முத்திரையுமிடப்பட்ட கடித உறையினை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரிகள் (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்) எப்பதவிக்கு விண்ணப்பிக்கிறார்களோ " கனிஷ்ட எழுதுவினைஞர்களுக்கான விண்ணப்பம் " அல்லது " உதவிக் காசாளருக்கான விண்ணப்பம் " என்றே எழுதுதல் வேண்டும்.

தேவையான தகுதிகள் அற்றோர் விண்ணப்பிக்காதிருக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

ஏற்கனவே 15.2.64 லும் 28.3.64 லும் ஸ்ரீ லங்காப் பத்திரிகையில் வெளியான எங்களுடைய விளம்பரத்திற்கிணங்க விண்ணப்பித்தவர்கள் திரும்பவும் விண்ணப்பிக்குமாறு தயவுடன் வேண்டப்படுகின்றனர்.

எப். அமரசிங்கா,
உதவிப் பொது முகாமையாளர் (ஊழியர்கள்).

1964 ம் ஆண்டு மே மீ 4 ந் உ.

5–270—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

## பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இல. 1/23/6/6/1 (ஜீ).

### மத்திய எழுதுவினைஞர் பரீட்சை—செப்டம்பர், 1962

1963 ம் ஆண்டு நவம்பர் மாதம் 1 ந் திகதி 13,806 ம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1963 ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25 ந் திகதி இடப்பட்ட விபரத்தைத் தொடர்ந்து, 1962 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடாத்தப்பட்ட மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் கீழ்க்காணும் பரீட்சார்த்திகளும் தபால் எழுதுவினைஞர் சேவையின் பொதுவகுப்பில் நியமனம் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

| பெயர் | விலாசம் |
|---|---|
| அதிகாரி, ஏ. ஏ. எல். .. | ருக்கவில்லா, வியாங்கொடை |
| அபயசிறிவர்த்தன, டி. பி... | கலககம்வடுவ, வலஸ்முல்லே |
| ஆரியசேன, எம். டி. .. | " வில்சன் ", லகமுவ, கடுகன்னவை |
| எக்கநாயக்கா, பி. .. | கட்டுவலமுல்லே, எல்கிரியா, தெலிஜவில்லே |
| கருணரத்ன, கே. டி. .. | 22, மில்ரோட், கட்டுபெத்தை, மொறட்டுவை |
| கருணரத்ன, பி. ஜீ. .. | பின்னகொடை, தெலிகட, கின்மெல்லாகக |
| குணசேகரா, ஜெ. ஏ. .. | 112, கொட்டகேரா, அவிசாவெலே |
| குணசேன, டி. டி. .. | கயுககவத்தை, பிட்டகொரடுவா, கும்பலகம, தொந்துரு |
| குலதிசா, ஆர். ஏ. .. | மொட்டுனே, வியாங்கொடை |
| சமரநாயக்கா, எஸ். .. | தொழிற் கந்தோர், மாத்தறை |
| சமரசேன, கே. ஜீ. .. | 1 ம் இலக்கம் கோவில் வீதி, நாவலரோட், இராஜகிரியா |
| சிறிபால, ஏ. .. | கருமால்கொடை, கனுகலே, கபறுவை |
| சிறிவர்த்தன, ஆர். ஆர். .. | புவாக்வத்தை, அக்குறசை |
| சுமணசேன, கே. டபிள்யூ... | சிறுப் பிரிவு, பிரதம தபாற் கந்தோர், கொழும்பு |
| சேனநாயக்கா, ஜீ. எம். பி... | அங்கொடை, பெந்தோட்டை |
| சியொன் சிங்ஞோ, ஜீ. .. | 44, உறுமிவல குடியேற்றம், புலத்கொகுப்பிட்டி |
| திஸ்சநாயக்கா, டி. எம். எஸ்... | 590/1, இகலவியன்வில்ல, கடவத்தை |
| பிரான்சிஸ், எம். ஏ. .. | விஜந்தி, கட்டுவை, தெலிஜவில்லே |
| பியதாச, ஆர். எம். .. | சப்புககலந்தை, மிரியப்பெற்றை, பாசறை |
| பெரேரா, யூ. எல். வி. பி... | கரேல்லே, உடப்பட்டுவை |
| பெர்ணாண்டோ, எச். எல். .. | சென்மேரிஸ் கல்லூரி, எல்பிட்டி |
| லியனகே, சி. .. | பொலிஸ் நிலையம், கந்தறை |
| வணிகசுந்தரா, டீ. ரி. .. | தபாற் தந்தித் தலைமை அதிபதியின் காரியாலயம், கொழும்பு 1 |
| விமலசேன, ஏ. ஜீ. பி. .. | இரத்தின வில்லா, கொடலவெல்லே, தங்காலே |
| விஜயசுந்தரா, கே. .. | கபக்கலே, இந்துறுவை |
| விஜயவர்த்தன, எச். ஆர்... | குருணகொடை, கொட்டியகும்புறை |
| வீரசேன, என். ஜீ. .. | காலவீவா ரோட், கலேவெல்லே |
| ஜெயசிறி, ஏ. எம். .. | 121/30, மாயதுன்னே, உகனே |
| ஜெயசேகரா, பி. .. | ஜெயசிறி, உக்வத்தை, ஜின்தோட்டை |

2. அரசாங்கம் இப்பரீட்சார்த்திகளுக்கு உடனே உத்தியோகம் கொடுப்பதற்குப் பொறுப்பேற்காது. ஆனால் இடங்கள் காலியாக வரும்போது அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும். எல்லா நியமனங்களும் மூன்று வருடங்களுக்குப் பரீட்சார்த்தமானவையாகவும் சேவையின் விதிகளுக்குக் கட்டுப்பட்டவையுமாகும். இவர்கள் ஒரு வைத்திய பரிசோதனைக்கும் உள்ளாவர்.

3. பரீட்சார்த்திகளுடன் தபாற் கந்தோர்த் தலைமை அதிபர் நேரிற் தொடர்பு வைப்பார்.

கீர்த்தி வீரக்கொடி,
திறைசேரிப் பிரதிச் செயலாளருக்காக.

பொதுத் திறைசேரி, கொழும்பு,
1964 ம் ஆண்டு மே மீ 9 ந் வ.

5–468—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல். 14,035

---

## இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரித் திணைக்களம்

### கனிட்ட தொழில் நுட்பப் பாடசாலை, யாழ்ப்பாணம்.

கழக ஆண்டு 1964–65

யாழ்ப்பாணத்துக் கனிட்ட தொழில் நுட்பப் பாடசாலையின் போதனையினங்களுக்கான பிரவேச விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

#### போதனையினங்கள்

(1) இருவருட பகல் தொழில் வகுப்புக்கள் (தமிழ்)
(2) இருவருட பகல் வணிக தகுதிப்பத்திரப் போதனைகள் (தமிழ்)
(3) இருவருட பகல் வணிக தகுதிப்பத்திரப் போதனைகள் (ஆங்கிலம்)
(4) மூன்று வருட பகல் பகுதிநேர கட்டட அமைப்புப் போதனை (தமிழ்)
(5) ஒருவருட மாலை எந்திரவியல் விஞ்ஞான ஆரம்பப் போதனையினம் (ஆங்கிலம்)
(6) மூன்று வருட மாலை பொறிமுறை எந்திரவியல் (ஆங்கிலம்)
(7) மூன்று வருட மாலை மின்சார எந்திரவியல் (ஆங்கிலம்)
(8) மூன்று வருட மாலை கட்டட அமைப்பு (ஆங்கிலம்)
(9) மூன்று வருட மாலை அளத்தலும் மட்டம் பார்த்தலும் (ஆங்கிலம்)
(10) ஒருவருட மாலைச் சுருக்கெழுத்தாளர் தகுதிப் பத்திரப் போதனை (தமிழ்)
(11) ஒருவருட மாலைச் சுருக்கெழுத்தாளர் தகுதிப் பத்திரப் போதனை (ஆங்கிலம்)
(12) இருவருட மாலை கணக்குப்பதிவுகாரன் வணிக தகுதிப்பத்திரப் போதனை (தமிழ்)
(13) இருவருட மாலை கணக்குப்பதிவுகாரன் வணிக தகுதிப்பத்திரப் போதனை (ஆங்கிலம்)

மேற்கூறிய போதனையினங்களுள் எவற்றுக்காவது பிரவேசவனுமதி கோருவோர் யாழ்ப்பாணம் கனிட்ட தொழில் நுட்பப்பாடசாலை அதிபரிடமிருந்து 22.5.64 வரை பெறக்கூடிய நியமப்பத்திரத்தில் விண்ணப்பித்தல் வேண்டும்.

போதனையினங்கள் பற்றிய விவரங்களைத்தரும் கையேட்டின் விலை ரூபா 3/-. தபால் மூலம் பெறுவோர் –/50 சதம் கூடுதலாகக் கொடுத்தல் வேண்டும்.

எல்லா விண்ணப்பங்களும் 1964 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பதாக யாழ்ப்பாணம் கனிட்ட தொழில் நுட்பப்பாடசாலை அதிபரிடம் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படல் வேண்டும்.

பதில் பதிவாளர்.

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரித்
திணைக்களம்,
கொழும்பு 10.

1964 ம் ஆண்டு ஏப்றில் மீ 30 ந் வ.

5–326—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

## சௌக்கியப் பகுதி

### பொதுச் சௌக்கிய பயில்வோர் (பப்ளிக் ஹெல்த் லேணர்ஸ்) பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காகப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுத்தல்

பொதுச் சௌக்கிய பயில்வோருக்கான பயிற்சி வகுப்புக்கு அனுமதிப்பதற்காக 1964 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19 ந் திகதியன்று பின்வரும் நிலையங்களில் நடைபெறவிருக்கும் ஒரு போட்டிப் பரீட்சைக்கு இலங்கையரான (ஆண்) பரீட்சார்த்திகளிடமிருந்து சௌக்கிய சேவை அத்தியட்சர்களால் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

விண்ணப்பிக்கும் முறைகள், பரீட்சைக்கு அனுமதி பெறுவதற்கு வேண்டிய தகைமை நிபந்தனைகள், பயிற்சி பெறுங்காலத்திலும், சேவைக் காலத்திலும் அனுசரிக்க வேண்டிய நிபந்தனைகள் என்பன சம்பந்தமான முழு விவரங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

2. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பகாரரும் கீழ்க்காணும் விஷயங்களில் திருப்திகரமான ஆதாரங்களைக் காட்டுதல் வேண்டும் :—

(அ) விண்ணப்பக்காரர் 1964 ம் ஆண்டு மே மாதம் 1 ந் திகதியன்று 19 வயதுக்குக் குறையாதவராகவும், 24 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். சௌக்கிய சேவைப் பகுதியில் தற்போது சேவை செய்துவரும் ஊழியர்களைப் பொறுத்த மட்டில், அவர்களின் ஆகக் கூடிய வயது 32 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பகுதியின் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் அல்லது அதனிலும் உயர்வான பரீட்சையில் சித்தியெய்தி இருத்தல் வேண்டும் ; அல்லது தாய்ப் பாஷை, எண்கணிதம் அன்றேல் கணித சாஸ்திரம் (மதமற்றிக்ஸ்) எனும் இரு பாடங்களுடன் வேறு நான்கு பாடங்களும் உட்பட மொத்தம் ஆறுபாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண)ப் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியெய்தி இருத்தல் வேண்டும்.

3. **விண்ணப்பிக்கும் முறை.**—(அ) விண்ணப்பப் பத்திரங்கள் வழங்கப்படுவதில்லை. இதன் கீழ் காணப்படும் விண்ணப்பமாதிரிப் பத்திரத்தைப் போல், விண்ணப்பத்தைத் தயாரித்து நிரப்பி அதனை ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தான் வசிக்கும் பிரதேசத்துக்குப் பொறுப்பான சௌக்கிய சேவை அத்தியட்சருக்கு (சுப்பிரண்டன், ஹெல்த் சேர்விஸ்) 1964 ம் ஆண்டு ஜூன் மாதம் 1 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத் தக்கதாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும். விண்ணப்பத்தை வைத்தனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் " பொதுச் சௌக்கிய பயில்வோரைத் தேர்ந்தெடுப்பதற்கான விண்ணப்பம்" என்று எழுதி அனுப்ப வேண்டும். பரீட்சார்த்திகள் தெரிந்து கொள்ளும் பொருட்டு சௌக்கிய சேவை அத்தியட்சர்களின் அட்டவணை யொன்று இதன் கீழ் தரப்படுகிறது :—

| | நிலையம் | | சௌக்கிய சேவை அத்தியட்சர் விலாசம் |
|---|---|---|---|
| 1. | அநுராதபுரம் | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், அநுராதபுரம் |
| 2. | மட்டக்களப்பு | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், மட்டக்களப்பு |
| 3. | பதுளை | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், பதுளை |
| 4. | கொழும்பு | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், கொழும்பு |
| 5. | காலி | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், காலி |
| 6. | யாழ்ப்பாணம் | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், யாழ்ப்பாணம் |
| 7. | கண்டி | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், கண்டி |
| 8. | கேகாலை | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், கேகாலை |
| 9. | குருநாகல் | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், குருநாகல் |
| 10. | களுத்துறை | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், களுத்துறை |
| 11. | மாத்தறை | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், மாத்தறை |
| 12. | மாத்தளை | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், மாத்தளை |
| 13. | புத்தளம் | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், புத்தளம் |
| 14. | இரத்தினபுரி | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், இரத்தினபுரி |
| 15. | வவனியா | .. | சௌக்கிய சேவை அத்தியட்சர், வவனியா |

குறிப்பிட்ட திகதியின் பின்னர் வந்து சேரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். **சௌக்கிய சேவை அதிபதி, கொழும்பு என்ற விலாசத்துக்கு எந்த விண்ணப்பமும் அனுப்பப்படக்கூடாது.**

3. (ஆ) இதன் கீழ் கையொப்பமிட்டிருப்பவரின் பெயருக்கோ, இந்தப் பகுதியின் எந்த உத்தியோகத்தரின் பெயருக்கோ விண்ணப்பத்தை அனுப்பக் கூடாது. மேலும் இந்தக் கந்தோரில் சேவை செய்யும் எந்த உத்தியோகத்தர் கையிலும் விண்ணப்பத்தைக் கொடுக்கவுங் கூடாது.

(இ) ரூபா 20 (இருபது) பெறுமதியான தபால் முத்திரையை விண்ணப்பத்தில் ஒட்டி அதன் மீது விண்ணப்பதாரர் கையொப்பமிட்டுச் செல்லுப்படியற்றதாக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பம் செய்பவர் ஏற்கனவே ஒரு உத்தியோகத்தில் இருந்தால், அவர் தனது முதலாளியிடம் " விண்ணப்பதாரர் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், இப்பயிற்சி தொடங்கும்போது விண்ணப்பதாரர் தான் விடுவதற்குச் சம்மதிப்பதாக " ஒரு கடிதம் வாங்கி விண்ணப்பத்துடன் அனுப்பவேண்டும்.

4. **பரீட்சைத்திட்டம்.**—இப்பரீட்சை இரண்டு பாகங்களாக நடைபெறும். முதலில் நடைபெறும் எழுத்துப்பரீட்சையின் முடிவைக் கொண்டு, போட்டி முறையில், பரீட்சார்த்திகள் நேர்முகப்பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் திகதி பரீட்சார்த்திகளுக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். பரீட்சார்த்தி எம் மொழியில் (1) பாஷையும் வியாசமும் என்ற பாடத்தை எடுத்தாரோ அம் மொழியிலேயே நேர்முகப்பரீட்சையும் நடைபெறும்.

பரீட்சைப் பாடங்கள் பின்வருமாறு :—

| | | புள்ளிகள் |
|---|---|---|
| (1) | பாஷையும் வியாசமும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) $1\frac{1}{2}$ மணித்தியாலங்கள் .. | 150 |
| (2) | பொது அறிவும் இலங்கைபற்றிய அறிவும் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) 1 மணித்தியாலம் .. | 100 |
| (3) | பொது விவேகம் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) 45 நிமிடங்கள் .. .. | 100 |

**குறிப்பு.**—இரண்டாம் பந்தியிற் கூறப்பட்ட பிரகாரம் பரீட்சார்த்தி தனது கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையை எந்த மொழியில் எடுத்து சித்தியெய்தினாரோ அதே மொழியில் (தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம்) இப்பரீட்சையையும் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார். எனினும்,

(i) வெவ்வேறு மொழிகளில் வெவ்வேறு பாடங்களை எடுத்து கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியெய்தியுள்ள பரீட்சார்த்தி யொருவர் இப்பரீட்சையில், அந்தந்த மொழிகளில் அந்தந்தப் பாடங்களையும் ஏனைய பாடங்களை முதலாவது எடுக்கும் பாட (பாஷையும் வியாசமும்) எடுக்க வேண்டும்.

(ii) கல்வித் தராதரப்பத்திரப் பரீட்சையைத் தமிழ் அல்லது ஆங்கில மொழியில் எடுத்துச் சித்தியெய்திய அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியில் பயிற்றப்பட்ட பரீட்சார்த்தி யொருவர் விரும்பினால் சிங்கள மொழியில் இப்பரீட்சையை எடுக்கலாம்,

(iii) நேர்முகப்பரீட்சை புள்ளிகள் .. .. 100
முதலாவது பாடமான பாஷையையும் வியாசத்தையும் எம் மொழியில் எடுக்கிறாரோ அம்மொழியிலேயே நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சார்த்தி பரீட்சிக்கப்படுவார்.

(ஆ) பரீட்சை மண்டபத்துள், மேற்பார்வையாளர் திருப்தி கொள்ளும் படியாக ஒவ்வொரு பாடவேளையிலும் பரீட்சார்த்தி தனது அடையாளச் சீட்டை மேற்பார்வையாளரிடம் காண்பிக்கவேண்டும். இதற்கு ஆதாரமாகக் கீழ்க்காணப்படுவனவற்றில் ஒன்றைப் பரீட்சார்த்தி வைத்திருத்தல் வேண்டும் :—

(க) தபாற்கந்தோர் தலைமை அதிபதி (போஸ்ட் மாஸ்டர் ஜெனரல்) வழங்கிய அடையாளச்சீட்டு.

(கா) பரீட்சை நடைபெறும் திகதிக்கு முந்திய மூன்று வருடங்களிற்குள்ளாக எடுக்கப்பட்ட வெளிநாட்டுப் பிரயாணச் சாதனம் (பாஸ்போர்ட்)

(கி) அரசாங்கப் பகுதியொன்றின் அதிகாரத்தோடு பரீட்சை நடைபெறும் திகதிக்கு மூன்று வருடங்களுக்குள்ளாக கொடுக்கப்பட்டதும், பரீட்சார்த்தியின் புகைப்படத்தைக் கொண்டதுமான பத்திரம் அனுமதிச் சீட்டு (லைசென்ஸ்) அல்லது வேறு சான்றுப் பத்திரம்.

பரீட்சைப் பிரவேசச் சீட்டுடன் மேற்கண்ட அடையாளச் சீட்டுக்களிலொன்றை எடுத்துச் செல்லாத பரீட்சார்த்தி இப்பரீட்சையை எடுக்க அனுமதிக்கப்படமாட்டார்.

(இ) நேர்முகப்பரீட்சை இதற்கென்று நியமிக்கப்பட்ட ஒரு சபையால் நடாத்தப்படும். திகதியும் இடமும் பரீட்சார்த்திக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும். நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு இப்பகுதியால் எவ்வித பிரயாணச் செலவுகளும் கொடுக்கப்படமாட்டாது. விண்ணப்பத்தோடு அனுப்பிவைத்த பத்திரங்களின் மூலப்பிரதிகளை பரீட்சார்த்தி நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) இப்பரீட்சை, பரீட்சைகள் பகுதியின் மேற்பார்வையின் கீழ் நடைபெறும். இடத்தின் பெயர் பரீட்சார்த்திகளுக்குத் தெரிவிக்கப்படும்.

(உ) பயிற்சி வகுப்பில் அனுமதிப்பதற்குப் பரீட்சார்த்திகளைத் தேர்ந்தெடுப்பது, போட்டிப் பரீட்சையில் பரீட்சார்த்திகளின் திறமை காரணமாக ஏற்படும் முடிவையும் பயிற்சி வகுப்பிலுள்ள காலித்தானங்களையும் பொறுத்துள்ளது. பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகளின் பெயர்கள் காலக்கிரமத்தில் பத்திரிகைச் செய்தி மூலம் பிரசுரிக்கப்படும்.

5. **வைத்தியப் பரீட்சை.**—சித்தியெய்திய பரீட்சார்த்திகள் இலங்கையின் எப்பாகத்திலேனும் சேவை செய்வதற்கு உடற்றகுதிவாய்ந்தவர் களெனக் காட்டுவதற்கு ஒரு வைத்தியப் பரீட்சைக்குள்ளாக வேண்டும்.

6. **களுத்துறையிலுள்ள பயிற்சி வகுப்பின் பயிற்சித் திட்டம்.**—

(அ) பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் சௌக்கிய அரச சங்கத்தின் பரீட்சைச் சபைக்கு ரூபா 150 செலுத்துவதோடு கீழ்க்காணும் உபகரணங்களையும் வைத்திருக்க வேண்டும் :—

(க) ஒரு துவிச்சக்கரவண்டி ;
(கா) வரையும் உபகரணங்கள் ;
(கி) அளவை நாடாவும் (ரேப்) அளவு கோலும் ;
(கீ) ஏனைய உபகரணங்கள், இவை பயிற்சி வகுப்பில் அனுமதிக்கு முன், பயிற்சி வகுப்புக்குப் பரீட்சார்த்திகளை அழைக்கும்போது தெரிவிக்கப்படும்.

பிணைப்பணமாக ரூபா 150 செலுத்திய பின்னர் தேக நலக்குறைவு காரணமாக பயிற்சி வகுப்பில் சேரமுடியாத பரீட்சார்த்தியொருவர், தராதரம் பெற்றவரும் பதிவு செய்துகொண்டவருமான ஓர் வைத்தியரிடமிருந்து ஒரு வைத்தியப் பத்திரமொன்றைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் இவர் செலுத்திய பிணைப்பணத்தின் 4/5 பங்குப் பணத்தைத் திரும்பவும் பெறலாம். வேறு எவ்வித சந்தர்ப்பத்திலும் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

(ஆ) ஒவ்வொரு பரீட்சார்த்தியும்—

(க) பயிற்சி வகுப்பின் நியமனத்தை ஏற்றுக்கொண்ட பின்னர் பயிற்சியை முற்றுக முடிக்கு முன்னர் சொந்த விருப்பத்திற் கிணங்கத் தன் நியமனத்திலிருந்து இராஜினாமா செய்தால் அல்லது முழுப்பயிற்சியையும் பெறத்தவறினால பயிற்சி பெறுங் காலத்தில் பெற்ற முழு வேதனத்தையும் (அலவன்ஸ்) சௌக்கியப் பகுதிக்குத் திருப்பிக் கொடுப்பேனென்று, அதற்கெனவுள்ள ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிடவேண்டும்.

(கா) திருப்திகரமாக பயிற்சியை முடித்த மூன்று மாதங்களுக்குள் அவருக்கு நியமனம் கொடுக்கப்பட்டால் அதை அவர் ஏற்பதாகவும் அவர் பதவியேற்று 36 மாதங்களுக்குள் பதவியிலிருந்து விலகவோ அல்லது விலகும்படி கேட்கவோ மாட்டேனென்றும் அதற்கெனவுள்ள ரூபா 1,000 பெறுமதியான ஒரு நிபந்தனைக்கும் உட்படவேண்டும்.

(இ) களுத்துறையிலுள்ள பயிற்சி வகுப்பில் ஏறத்தாழ பன்னிரண்டு மாதங்களுக்குப் பயிற்சியளிக்கப்படும்.

(ஈ) பயிற்சி பெறுங் காலத்தில் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் மூன்று வகையான புத்தகங்களை வைத்திருக்கவேண்டும். விரிவுரைக்கு ஒன்றும், சாதனை வேலைகளுக்கு ஒன்றும், வெளியிட செயல் முறை வேலைக்கு ஒன்றுமாக மூன்று பிரிவுகளாகப் புத்தகங்களை வைத்துப் பாவிக்க வேண்டும். பரிசோதனையின்போது இப்புத்தகங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(உ) பயிற்சிக்காலத்தில் மாதாந்த பரீட்சைகள் நடைபெறும். இப் பரீட்சைகளின் முடிவுகள் கடைசிப் பரீட்சையில் தீர்மானத்துக்கெடுத்துக் கொள்ளப்படும்.

(ஊ) **சௌக்கியக்கூறு விடுதி.**—சகல உபகரணங்களைக் கொண்ட விடுதியில், பயிற்சிக் காலத்தின்போது பரீட்சார்த்திகளுக்கு இலவச சாப்பாட்டு விடுதி வசதிகள் அளிக்கப்படும். அத்துடன் பயிற்சிக் காலத்தின் போது பரீட்சார்த்திகளுக்கு மாதாந்தம் ரூபா 50 வேதனமாக அளிக்கப்படும்.

(எ) **பயிற்சி நீக்கத்துக்குரிய காரணங்கள்.**—பயிற்சி பெறும் பரீட்சார்த்தியொருவர் அவரது வரவு இடாப்பு படிப்பு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றில் சௌக்கியசேவை அதிபதியின் திருப்தியைப் பெறத் தவறும் பட்சத்து பயிற்சிக் காலத்தில் எச்சமயத்திலும் பயிற்சி வகுப்பிலிருந்து விலக்கப்படுவதற்கு அருகதையுடையவராவர். அங்ஙனம் பயிற்சியிலிருந்து விலக்கப்பட்டவருக்கு, அவர் கட்டிய பணமெதுவும் திருப்பிக்கொடுக்கப்படாததுடன் வேறெந்தப் பயிற்சி வகுப்புக்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அருகதையற்றவருமாவர். பயிற்சி வகுப்பிலிருந்து தானுக விலகும் ஒருவருக்கு அவர் கட்டிய பணமெதுவும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. அத்துடன் பயிற்சி வகுப்பிலிருக்கும் போது அவர் சௌக்கியப் பகுதியிலிருந்து பெற்ற வேதனம் முழுவதையும் இப்பகுதிக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

(ஏ) **தகைமைப் பரீட்சை.**—பயிற்சி வகுப்புகள் 10 மாதம் முடிவடைந்ததும், சௌக்கிய ரோயல் சங்கத்தின் உள்ளூர் பரீட்சைச் சபையால் ஓர் போதனாமுறைப் பரீட்சையொன்று நடாத்தப்படும். அதைத் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு களுத்துறையில் வெளிக்கள வேலையில் பயிற்சியாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். அந்த இரண்டு மாதங்களும் முடிவடையும் நேரத்தில் சாதனாமுறைப் பரீட்சையும், வாய்மொழிப் பரீட்சையும் நடைபெறும்.

(ஐ) **நியமனம்.**—லண்டன், சௌக்கிய அரச சங்கத்தின் பரீட்சையாளர்களைத் திருப்தி செய்யும் (பரீட்சையில் சித்தியெய்தும்) பரீட்சார்த்திகள், காலித்தானங்கள் ஏற்படும்போது, சௌக்கியப் பகுதியில் பொதுச் சௌக்கிய பரிசோதகர்களாக நியமனம் பெறுவதற்கு அருகதையுடையவராவர்.

7. **சம்பளம், வேதனம் (அலவன்ஸ்), சேவை நிபந்தனைகள்.**—இரண்டாம் வகுப்பு பொதுச் சௌக்கிய பரிசோதகர்களின் சேவை அடிப்படையில் சகல நியமனங்களும் இருக்கும்.

**சம்பளம் :**—பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் ; வகுப்பு II : வருடத்துக்கு ரூபா 1,140 ஆகத் தொடங்கி 13 வருடங்களுக்கு ரூபா 120 வீதம் உயர்வு—ரூபா 2,700 வரை. இச்சம்பள விகிதத்தில் வருடச் சம்பளம் ரூபா 1,980 ஆவதற்குமுன் திறமைத்தடைப் பரீட்சையுண்டு.

பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் வகுப்பு I : வருடத்துக்கு ரூபா 2,820 ஆகத் தொடங்கி ரூபா 120 வீதம் 9 வருடங்களுக்கும், ரூபா 180 வீதம் ஒரு வருடத்துக்கும் உயர்வு—ரூபா 4,080 வரை வருடச் சம்பளம் ரூபா 3,420 ஆவதற்குமுன் திறமைத்தடைப் பரீட்சையுண்டு.

பொதுச் சௌக்கிய பரிசோதகர்கள் விசேட வகுப்பு : வருடத்துக்கு ரூபா 4,260 ஆகத்தொடங்கி ரூபா 180 வீதம் ஆறு வருடங்களுக்கும், ரூபா 240 வீதம் ஒரு வருடத்துக்கும் உயர்வு—ரூபா 5,580 வரை வருடச் சம்பளம் ரூபா 4,980 ஆவதற்குமுன் திறமைத்தடைப் பரீட்சையுண்டு.

8. **வேதனம் (அலவன்ஸ்).**—வாழ்க்கைப்படி, விசேஷ வாழ்க்கைப் படி, வாடகைப்படி ஆகியன அரசாங்க விதிகள் பிரகாரம் வழங்கப்படும். பிரயாணப்படி, வீட்டுப்படி, காரியாலயப்படி, உத்தியோக உடைகள், தொப்பிகள், மழை அங்கிகள் ஆகியன பகுதி விதிகள் பிரகாரம் வழங்கப்படும்.

9. (க) இந்நியமனம், அரசாங்க சேவை அதிகாரசபைக் கட்டளைகள், நிதிவிதிகள் நடவடிக்கை விதிமுறைச் சட்ட விதிகள், சௌக்கிய சேவைப் பகுதி விதிகள், உத்தரவுகள், மற்றும் அரசாங்கத்தால் காலாகாலத்தில் பிறப்பிக்கப்படும் எவ்விதமான உத்தரவுகள், சட்ட விதிமுறைகள் முதலியவற்றிற்கு அடங்கியதாக இருக்கும். ஒவ்வொரு உத்தியோகத்தரும் மூன்று வருடங்களுக்கு பரீட்சார்த்த நிலையிலிருக்க வேண்டும்.

(கா) இப்பரீட்சை முழுவதையும் சிங்கள மொழிமூலம் எடுக்காதவரும் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவருமான பரீட்சார்த்திகள் தமது பரீட்சார்த்தமான காலத்தில் சிங்களம் கற்றல் வேண்டும். இப்பரீட்சார்த்திகள் சிங்களத்தில் ஒரு தகுதிகாண் பரீட்சையிற் சித்தியெய்துவதைப் பொறுத்தே பரீட்சார்த்தமான காலம் முடியும்போது பதவியில் உறுதிபெறுவர்.

(கி) பரீட்சார்த்தமான காலத்தில், விதிக்கப்பட்ட திறமைத் தரத்தைச் சிங்களத்தில் எய்தத்தவறுவோர் வேலையினின்று நீக்கப்படலாம். ஆனால் பொருத்தமான அதிகாரி, அரசாங்க பாஷையைக் கற்பதற்கு உண்மையாகவே முயற்சி செய்யப்பட்டுள்ளதெனத் திருப்திப்படுவாரானுல், அவ்வாறு நீக்கப்படுவது தள்ளிவைக்கபடலாம். பரீட்சார்த்த நிலையிலுள்ள உத்தியோகத்தர் உரிய தேதியின் பின்னர் நியாயமான ஒரு காலத்துள் குறித்த பரீட்சையிற் சித்தியெய்துவராயின், பொருத்தமான அதிகாரி தமது உசிதாசாரப்படி அவர் சிரேட்டத்துவக் கிரமத்தில் இழந்த நிலையை மீட்டுக்கொள்ளலாம்.

(கீ) அரசாங்க சேவையில் நியமனம் பெறும் சகல "புதிதாக சேர்ந்த உத்தியோகத்தர்கள்" இதுகாலவரை உண்டாக்கப்பட்ட அல்லது இனிமேல் உண்டாக்கப்படும் அரசாங்க மொழிக் கொள்கையின் கட்டளைகள், விதிகள், குறிப்பாக 1956 ம் ஆண்டு 33 ம் இலக்க அரசாங்க மொழிச் சட்ட விதிகளை நடைமுறையிற் கையாண்டு, அவைகளுக்கு அமைந்து நடக்க வேண்டும்.

(கு) உத்தியோகத்தர்கள், ஒரு வருடகால திருப்திகரமான சேவைக்குப் பின்னர் பால் கட்டுவதிலும் (கொழுக்கிப்புழு நோய்க்குச் சிகிச்சை செய்வதிலும்) திறமைச்சான்றிதழ்களைப் பெற்றிருப்பாராயின் அவர்களது முதலாவது சம்பள உயர்ச்சி கொக்கடுப்படும். நியமனம் பெற்ற ஒரு வருடகாலத்துக்குள் பால் கட்டுவதிலும் கொ. பு. நோ. சி. திறமைச்சான்றிதழ்களைப் பெறத்தவறும் பட்சத்தில் முதலாவது சம்பள உயர்ச்சி தடைசெய்யப்படும். அதன் பிறகு இவற்றைப் பெறத்தவறும் பட்சத்தில் சம்பள உயர்ச்சி தள்ளிவைக்கப்படும். எனினும், திறமைச் சான்றிதழைப் பெறத் தவறிய உத்தியோகத்தர்களைச் சேவையிலிருந்து விலக்குவதற்கு சௌக்கிய சேவை அதிபதிக்கு உரிமையுண்டு.

10. **சௌக்கிய அரசாங்கத்தால் அளிக்கப்படும் தராதரப் பத்திரம்.**—சௌக்கியப் பகுதியில் திருப்திகரமான வகையில் ஒரு வருட சேவை செய்து முடித்த பொதுச் சௌக்கிய பரிசோதகர்களுக்கு மட்டும் லண்டன், சௌக்கிய அரச சங்கத்தின் தராதரப்பத்திரங்கள் வழங்கப்படும்.

11. முந்திய தகைமைப் பரீட்சைகளில் சித்தியெய்தாத பரீட்சார்த்திகள் பயிற்சிக்கோ அன்றி மறு பரீட்சைக்கோ, சௌக்கிய சேவை அதிபதியின் அனுமதியோடு சௌக்கிய அரச சங்கத்தின் தலைப்பரீட்சைச் சபையின் வேண்டுகோளுக்கிணங்காத பட்சத்து அனுமதிக்கப்படமாட்டார்கள்.

12. மேற்கூறப்பட்டுள்ள சகல ஆதாரங்களையும் கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

13. நிராகரிக்கப்படும் விண்ணப்பங்களின் முத்திரைப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. பரீட்சார்த்தியொருவர் சுகவீனங்காரணமாகப் பரீட்சைக்குத் தோன்ற முடியாத பட்சத்து ஒரு பதிவு செய்துள்ள வைத்தியரிடம் ஒரு வைத்தியப்பத்திரம் வாங்கிச் சமர்ப்பித்தால் முத்திரைப் பெறுமதியின் 3/5 பங்குப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

பி. கே. டீ. சில்வா,
பிரதி அதிபதி (பொதுச் சௌக்கிய சேவை)
சௌக்கிய சேவை அதிபதிக்காக.

கொழும்பு,
1964 ம் ஆண்டு மே மீ 11 ந உ.

**விண்ணப்பப் பத்திரம்**

**பொதுச் சௌக்கிய பயில்வோர் பரீட்சை**

1. பெயர் (தலைப்பெயருடன்) :—
தன் பெயர் (தனித்த எழுத்துக்களில்) : ————.
வேறு பெயர்கள் (தனித்த எழுத்துக்களில்) : ————.
2. விலாசம் : ————.
3. வயதும் பிறந்த திகதியும் : ————.
4. இனம் : ————.
5. மணமானவரா ? மணமாகாதவரா ? : ————.
6. எந்நாட்டைச் சேர்ந்தவர் ? :—
(அ) பாரம்பரிய இலங்கையரா ? அல்லது
(ஆ) பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரஜையா ? :
பாரம்பரிய இலங்கையரானால் கீழ்க்காணும் விபரங்களைத் தருக :
பின்வருவோர் பிறந்த இடங்கள் :
(அ) விண்ணப்பதாரர் : ————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை : ————.
(இ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பாட்டன் : ————.
(ஈ) விண்ணப்பதாரரின் தகப்பன்வழிப் பூட்டன் : ————.
விண்ணப்பதாரர் இலங்கையில் பிறந்திருந்தால், (அ) வுடன் (ஆ) வைமட்டும் அல்லது (இ), (ஈ) இரண்டையும் நிரப்ப வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராக இருந்தால் (அ) வுடன் (ஆ), (இ) இரண்டும் அல்லது (இ), (ஈ) இரண்டும் நிரப்பப்படவேண்டும்.
7. சித்தியெய்திய கடைசிப் பரீட்சையும் கல்விகற்ற இடங்களும் ————.
8. பரீட்சை எடுக்கும் மொழி தமிழ்/சிங்களம்/ஆங்கிலம் : ————
9. பெற்றோரின் விலாசமும் அவர்களின் நாடும் :—
இலங்கையர் { பாரம்பரிய இலங்கையர் / பதிவுபெற்ற இலங்கைப் பிரஜை
10. பாடசாலையில் பங்குபற்றிய விளையாட்டுக்கள் : ————.
(கால்பந்து, மட்டைப்பந்து விளையாட்டுக்களும் சாரண இயக்கமும்
11. உமது தற்போதைய உத்தியோகம் ஏதாவது இருந்தால்: ————.
12. நீர் வேலையிலிருந்தால், பயிற்சி வகுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்து, அவ்வகுப்பில் உரிய நேரத்தில் சேருவதற்காக, உம்மை விடுதலை செய்வதற்கு உமது தலைவர் (முதலாளி) விரும்புகிறாரா ? : ————.
13. இதற்குமுன் எப்போதாவது இப்பயிற்சி வகுப்பில் இருந்திருக்கிறீரா ? : ————.

**குறிப்பு.**—பிறப்பத்தாட்சிப்பத்திரம், சான்றுப் பத்திரங்கள் ஆகியவற்றின் பிரதிகளை அனுப்பவேண்டியதில்லை. நேர்முகப்பரீட்சையின்போது இபபத்திரங்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கவேண்டும். நேர்முகப்பரீட்சையின்போது இம்மூலபபிரதிகளைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகள் நிராகரிக்கப்படுவர்.

அரசாங்க சேவையிலிருந்து திறமையீனங்காரணமாக இளைப்பாறவில்லையென்றும் பதவியிலிருந்து விலக்கப்படவில்லையென்றும், பாரதூரமான குற்றச்சாட்டின்பேரில் ஓர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லையென்றும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். பொய்யான உறுதிப்படுத்தல்களைக் கொடுப்பது, அரசாங்க சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவதற்கேதுவாகும் என்பதை நான் உணருகிறேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

பரீட்சார்த்தி இவ்விடத்தில் ரூபா 20/- பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன்மீது கையொப்பமும, திகதியும் இடவேண்டும்.

5-456—15.5.64 ந திகதிய வர்த்தமானி இல. 14,035

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### ஹஸலக உப பிரிவு

நீர்ப்பாசன இலாகா ஹஸலக உப பிரிவுக்குச் சேர்ந்த பின்வரும் வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் கண்டியிலுள்ள மத்திய பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக் கொள்ளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் பெயர் | பதிவுத் தொகை ரூபா | கேள்விக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. பிரதான வாய்க்காலில் 23 ம் கட்டை 17 ம் சங்கிலியில் 130 அடி நீளமான வானும் தண்ணீர் கடப்பும் கட்டுதல் (சிமெந்தி, பைப்பு, கொலர்ஸ், எம், எஸ் பார்ஸ், பி. ஆர். ஸி. பெப்ரிக் இலாகாவால் வேலைத்தளத்தில் கொடுக்கப்படும்) .. .. | 50,000 .. | 50 |
| 2. ஹஸலக சிறு குளத்தின் உள்மதவுக்கு இரும்பினால் இணைக்கப்பட்ட கதவுகள் கொடுத்தல .. | 35,000 .. | 50 |
| 3. ஹஸலக சிறு குளத்தின் வெளிமதவுக்கு இரும்பினால் இணைக்கபபட்ட கதவுகள் கொடுத்தல் .. .. | 35,000 .. | 50 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேல் குறிக்கப்பட்ட தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

இக்கேள்விகளுக்காகிய வெற்றுப்பத்திரங்கள் பள்ளேவத்தையிலுள்ள ஹஸலக உப பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு மே மாதம் 8 ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 1964 ம் ஆண்டு ஜூன் மாதம் 8 ம் திகதி திங்கட்கிழமை பகல் 12.00 மணி வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ஒவ்வொரு வேலைகளுக்கும் மேற்குறிக்கப்பட்ட தொகையைக் கட்டணமாக செலுத்தப்பட வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

இக்கேள்விகளைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

ஜே. ஏ. ஜே. ஜயசூரிய,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
ஹஸலக உப பிரிவு.

பள்ளேவத்தை,
1964 ம் ஆண்டு ஏப்ரில் மீ 27 ந உ.

5-193—15.5.64 ந திகதிய வர்த்தமானி இல. 14,035

## நீர்ப்பாசன இலாகா

செங்கலடி உபபிரிவின் கீழ் உள்ள வெலிகாகந்திய குளத்திற்கு தடுப்பு ஏற்பாடுகள் ஆகிய வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் கொழும்பு, 1 ல் உள்ள செயலகத்தில் 355 ம் இலக்க அறையிலுள்ள கமத்தொழில் காணி, நீர்ப்பாசன, மின்சார அமைச்சின் கேள்விப் பத்திரச் சபைத்தலைவர் அவர்களால் 1964 ம் ஆண்டு ஆனி மாதம் 9 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நீர்ப்பாசனப் பகுதி இலாகாவில் ரூபா 100,000 க்கும் அதற்கு மேலும் பதிவு செய்துள்ள மண் வேலைக்கான போதிய இயந்திரங்கள் வைத்திருக்கும் ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே மேற்படி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

மட்டக்களப்பிலுள்ள பெரும் பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொண்ட இரு பிரதி கொண்ட விண்ணப்பப் பத்திரங்களில் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

கொழும்பு நீர்ப்பாசன அதிபரின் அலுவலகத்தில் அல்லது கொழும்பைத் தவிர்ந்த ஏனைய கச்சேரியொன்றில் ரூபா 200 கேள்விப்பத்திரக் கட்டிப் பணமாகக் கட்டிப் பெற்ற பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 1964 ம் ஆண்டு ஆனி மாதம் 5 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் அலுவலக நேரங்களில் விண்ணப்பப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிகமான விபரங்கள் மட்டக்களப்பிலுள்ள பெரும் பிரிவு நீர்ப்பாசனம் பொறியியலாளரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நா. பெரியதம்பி,
நீர்ப்பாசன அதிபருக்காக.

கொழும்பு,
1964 ம் ஆண்டு மே மீ 2 ந் உ.

5–245—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

---

## நீர்ப்பாசன திணைக்களம்
### புத்தளம் நீர்ப்பாசன உபபிரிவு

கீழ்க்காணும் வேலைகட்குக் கேள்விப்பத்திரங்கள் குருநாகலிலுள்ள வடமேற்பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு யூன் மாசம் 2 ந் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன்பின் உடனே திறக்கப்படும்.

| வேலைகளின் விபரம் | ஒப்பந்தகாரர் பதிவு செய்யப் பட்டிருக்க வேண்டிய தொகை ரூபா | கேள்விக் கட்டணத் தொகை ரூபா |
|---|---|---|
| பஹறியாக்குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் பிரதான வலதுவாய்க்கால் 1 ம் 2 ம் மைல்கள் அமைத்தல் .. | 49,000 | 50 |
| பஹறியாக்குளத்தின் கீழ் நீர்ப்பாசன வசதிகள் பிரதான வலது வாய்க்காலின் முதலாவது இரண்டாவது "டீ" வாய்க்கால்களும் கட்டிடவேலைகளும் .. | 19,000 | 25 |

2. வேலைகட்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும் நீர்ப்பாசனத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப் பத்திரங்கள் புத்தளத்திலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1964 ம் ஆண்டு மே மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தற்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பிக்கவேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் வேலைகளுக்கு எதிரே குறிக்கப்பட்ட கேள்விக்கட்டணத்தொகையை ஒவ்வொரு கேள்விப் பத்திரங்களுக்கும் செலுத்தப்படவேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக்கட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப் பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

எம். எம். சிவப்பிரகாசம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
புத்தளம் உபபிரிவு.

புத்தளம்,
1964 ம் ஆண்டு மே மீ 7 ந் உ.

5–359—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

---

## நீர்ப்பாசன இலாகா

பெரும்பகுதி நீர்ப்பாசன பொறியியலாளர் (திருகோணமலைப் பகுதி), உவர்மலை, திருகோணமலை, அவர்களால் 9.6.1964 காலை 10.00 மணி வரை இவ்விலாகாவில் கீழ்காட்டப்பட்ட தொகைக்கும் அதற்குக் கூடிய தொகைக்கும் பதிவுபெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அல்லை விஸ்தரிப்புத்திட்டத்திலுள்ள அல்லை—கந்தளாய் பாதையில் திருத்த வேலைக்குக் கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும்.

நீர்ப்பாசன பொறியியலாளர் அல்லை விஸ்தரிப்புத்திட்டம் அவர்களிடமிருந்து பெறப்படும் கேள்விப்பத்திரத்தில், கேள்விப்பத்திரம் இரு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்படவேண்டும். மேலும் தேவையான விபரங்கள் யாவும் இவரிடமிருந்து பெறலாம். அத்துடன் இணைப்புவாய்க்கால் வெட்டி கட்டுப்போடும் மாதிரிப்படம் இவரது கந்தோரில் பார்வையிடலாம்.

கேள்விப்பத்திரங்கள், தாம் இவ்விலாகாவின் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரரென்று நிரூபிப்பவர்களுக்கும், சோமபுர நீர்ப்பாசனக் கந்தோரில் அல்லது ஏதுமொரு கச்சேரியில் கேள்விப்பத்திரக்கட்டணம் மேற்கூறியபடி கட்டி பற்றுச்சீட்டும் பெற்றுக்கொள்பவர்களுக்கும் மட்டுமே 22.5.1964 இருந்து 4.6.1964 வரை (இரண்டு நாட்களும் உட்பட) கந்தோர் நேரங்களில் கொடுக்கப்படும்.

தற்சமயம் அரசாங்கத்தில் ஒப்பந்தவேலைசெய்து கொண்டிருப்பவர்கள் கேள்விப்பத்திரம் பெறுவதற்கு அவ்வேலைக்கும் பொறுப்பாயுள்ள அதிபரிடமிருந்து அவர்கள் ஒப்பந்தவேலை திருப்திகரமாய் செய்கிறார்கள் என்பதை நிரூபிப்பதற்குரிய அத்தாட்சிப் பத்திரமொன்று பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் பொழுது கேள்விப் பத்திரங்களை சமர்ப்பித்தோர் விரும்பினால் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

கேள்விப்பத்திரங்கள் பெரும்பாக நீர்ப்பாசன பொறியியலாளர், திருகோணமலைப்பகுதி, திருகோணமலை அவர்களால் அவரது கந்தோரில் 9.6.1964 காலை 10.00 மணிக்குத் திறக்கப்படும்.

விபரம்

| வேலை செய்யவேண்டிய இடம் | பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தொகை ரூபா | கேள்விப் பத்திரக் கட்டணம் ரூபா |
|---|---|---|
| 1. 14 ம் கட்டை 2,400′—15 ம் கட்டை | 21,000 அதற்கு மேலும் .. | 25 |
| 2. 15 ம் கட்டையிலிருந்து 16 ம் கட்டைவரை | 40,000 அதற்கு மேலும் .. | 50 |
| 3. 16 ம் கட்டையிலிருந்து 17 ம் கட்டைவரை | 40,000 அதற்கு மேலும் .. | 50 |
| 4. 17 ம் கட்டையிலிருந்து 18 ம் கட்டைவரை | 40,000 அதற்கு மேலும் .. | 50 |
| 5. 18 ம் கட்டையிலிருந்து 19 ம் கட்டைவரை | 40,000 அதற்கு மேலும் .. | 50 |
| 6. 19 ம் கட்டையிலிருந்து 19 ம் கட்டை 2,400′ வரை | 15,000 அதற்கு மேலும் .. | 25 |

ப. சிவசுப்பிரமணியம்,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
அல்லை விஸ்தரிப்புத்திட்டம்.

சோமபுரம், கி. மா.

5–401—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### அனுராதபுர உப பிரிவு

பெலிகமுவ—நிலகம—தேவ கூவ ரோட்டுக்கு கல்லுப் போட்டு தார் ஊற்றுதற்கான கேள்விப்பத்திரம் அனுராதபுரத்திலுள்ள வடமத்திய மாகாணப் பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1964 ம் ஆண்டு ஆனி மாசம் 9 ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்படி வேலைக்கு 44,000 ரூபாவுக்கும் அதற்கு மேலும் பதிவுசெய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரத்தைச் சமர்ப்பிக்க தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் அனுராதபுரத்திலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 1964 ம் ஆண்டு ஆனிமாதம் 5 ம் திகதி வெள்ளிக்கிழமை வரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகத்துடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா என்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் ரூபா 50/– கேள்விக்கட்டணமாக செலுத்தப்பட்ட வேண்டும். இக்கேள்விக்கட்டணத்தை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச் சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்வியைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
அனுராதபுர உப பிரிவு.

அனுராதபுரம்,
1964 ம் ஆம் ஏப்பிரில் மீ 28 ந் உ.

5-172—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

---

## கடற்றொழிற் பகுதி

### ஒரு கடலக டீசல் இயந்திரம் விற்பனைக்காய கேள்விகள்

ஒரு கடலக டீசல் இயந்திரம் விற்பனைக்காய கேள்விகள் காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபரவர்களால் 1964 ம் ஆண்டு மே மாதம் 29 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும். கொழும்பு 15 இலுள்ள முகத்துவார அரசாங்க கடற்றொழிற்சாலையில் இயந்திரத்தை பார்வையிடலாம்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 100/–

டீ. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி,
காலிமுகம், கொழும்பு 3,
1964 ம் ஆம் மே மீ 4 ந் உ.

5—210—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

## கடற்றொழிற் பகுதி

### நோர்வேஜியன் எஃகு மீன்பிடிப் படகு விற்பனைக்காய கேள்விகள்

காலிமுகம், கொழும்பு 3 இலுள்ள கடற்றொழில் அதிபர் அவர்கள், உரிய தளபாடங்களுள், வொலிண்டர் கடலக டீசல் இயந்திரம் இணைக்கப்பட்டதும் 1052 ம் ரகத்தை சேர்ந்ததுமான, 30′ × 9½′ நீளம் கொண்ட நோர்வேஜியன் எஃகு மீன்பிடிப் படகு விற்பனைக்காய கேள்விகளை 1964 ம் ஆண்டு மே மாதம் 29 ம் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 2 மணிவரையும் ஏற்றுக்கொள்வார். படகு இப்பொழுது கற்பிட்டியில் கிடக்கின்றது. கற்பிட்டிக் கடற்றொழிற் காரியாலயத்தோடு ஒழுங்குகள் செய்து அதனைப் பார்வையிடலாம். இயந்திரம் முகத்துவாரம், றெக் ஹவுஸ் ஒழுங்கையிலமைந்துள்ள மீன்பிடித் தொழிற் சாலையிலிருக்கின்றது. அதனை முகாமையாளருடன் ஒழுங்கு செய்து பார்வையிடலாம்.

கேள்வி வைப்புப் பணம் ரூபா 100/–

டீ. ஆர். எல். பாலசூரிய,
கடற்றொழில் அதிபர்.

கடற்றொழிற் பகுதி, காலிமுகம்,
கொழும்பு 3,
1964 ம் ஆம் மே மீ 4 ந் உ.

5–211—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## ஒலிபரப்புத் தகவற் பகுதி

மொறட்டுவ வெலோனவிலுள்ள அரசாங்கத் திரைப்படப் பிரிவில் உபயோகப்படாத மோட்டார் பக்றிகள், மோட்டார் ரயர் ரியூப்புகள், வேலைக்கூடக் கருவிகள், இதர அலுவலக உபகரணங்கள் முதலானவை 1964 மே 29 ந் திகதி பிற்பகல் 1.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் பொருட்களை வாங்கியவர்கள் அதேதினம் மாலை 4.30 மணிக்கு முன்னர் முழுத்தொகையையும் செலுத்தி பொருட்களை எடுத்துச்சென்றுவிட வேண்டும். இப்பொருட்களை விற்பனைத் தினத்தன்று காலை 9.30 மணியிலிருந்து பிற்பகல் 1.30 மணி வரைக்கும் மொறட்டுவை வெலோனவிலுள்ள திரைப்படப் பிரிவில் பார்வையிடலாம்.

எஸ். பீ. சேனநாயக்க,
பதில் மாஅதிபர்,
ஒலிபரப்புத் தகவல் பகுதி.

இலங்கை வானொலி,
கொழும்பு 7,

5–258—15.5.64 ந் திகதிய வர்த்தானி இல. 14,035

## சாக்கு விற்பனை

1964 ம் ஆண்டு மே மாதம் 29 ம் திகதி காலை 10 மணிக்கு தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் வெற்றுச்சாக்குகள் ஏலத்தில் விற்கப்படும். விற்பனைக்குள்ள சாக்குகளின் விபரம் பின்வருமாறு :—

தரம் 1—450 சாக்குகள்
தரம் 2—350 சாக்குகள்
தரம் 3—100 சாக்குகள்

வாங்குபவர் உடனே பணம்கட்டி சாக்குகளை அப்புறப்படுத்தல் வேண்டும்.

டபிள்யு. எல். டி அல்விஸ்,
அதிபர்.

மிருகக் காட்சிச்சாலை, தெஹிவளை,
1964 ம் ஆம் மே மீ 5 ந் உ.

5–265—15.5.64 ந் திகதிய வர்த்தமானி இல. 14,035

---

*வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு தான் மாற்றப்படும்.*

*வெளியாவதற்கு நான்கு வேலை நாட்களுக்கு முன் பி. ப. 3.30 மணிக்குள் (சாதாரணமாக திங்கட்கிழமை பி. ப. 3.30 மணி) அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்துசேரவேண்டும்.*

*அரசாங்க வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, கருமாலயம், கொழும்பு, அவர்கட்கு நேரடியாக சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக் கொள்ளமாட்டார்.*

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்திசெய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.